

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 340 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 04 – சனிக்கிழமை 20 ஜுலை 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 340 : Thiruvalluvar Year - 2055 - Aadi 04 - Saturday 20 July 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## பள்ளிக்கல்வித்துறை சார்பில் - தமிழ்நாடு முழுவதும்

# ரூ.264 கோடி செலவில் வகுப்பறை - ஆய்வகக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 20-**

**பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரூ.264.15 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், 264 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 956 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 12 ஆய்வகக் கட்டடங்கள், தகைசால் பள்ளிகளில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் மற்றும் திருவண்ணாமலையில் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கல்வி வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, ஒருங்கிணைந்த கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ. நரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், 264 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 956 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 12 ஆய்வகக் கட்டடங்கள், தகைசால் பள்ளிகளில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் மற்றும் திருவண்ணாமலையில் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கல்வி வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

### வகுப்பறைக் கட்டடங்கள் ஆய்வகக் கட்டடங்கள்

அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை வேலூரில் நடைபெற்ற விழாவில் 1.2.2023 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் 2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.1,887.75 கோடியும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.316 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பள்ளிக்கல்வித் துறையில் 114 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் 26 மாவட்டங்களில் உள்ள 106 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 515 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 12 ஆய்வகக் கட்டடங்கள்;

தொடக்கக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் குழந்தை நேய வகுப்பறை கட்டும் திட்டத்தின் கீழ், 68 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 25 மாவட்டங்களில் உள்ள 176 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 441 வகுப்பறை கட்டடங்கள்;

தமிழ்நாட்டின் 28 மாவட்டங்களில் இயங்கி வரும் 28 தகைசால் பள்ளிகளில் 61 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள்;

திருவண்ணாமலையில் 19 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கூட்ட அரங்குகள், அலுவலக அறைகள், காணொலிக் கூடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கல்வி வளாகம்;

என மொத்தம் 264 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கல்வித் துறை கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ்.மதுமதி, ஒருங்கிணைந்த கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ. நரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## சென்னையில்

# ‘அம்மா’ உணவகத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு!

## தரமான உணவு தயாரித்து வழங்கவும் அறிவுரை!

**சென்னை, ஜூலை 20 -**

**சென்னையில் அம்மா உணவகங்களைத் தொடர்ந்து சிறப்பாக நடத்த உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமையலறை மற்றும் உணவுக் கூடத்தை தூய்மையாகப் பராமரிக்கவும், ஏழை எளியோர் பயன்பெறும் வகையில், சுவையான தரமான உணவை தயாரித்து வழங்கவும் அறிவுரை வழங்கியுள்ளார்.**

**அது தவிர, 21 கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள அம்மா உணவகங்களை மேம்படுத்திட ஆணையிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தங்கள் பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களுக்கு அவ்வப்போது நேரில் சென்று ஆய்வு செய்து தேவையான உதவிகளை செய்து தருமாறு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 கோட்டங்களிலும், 7 அரசு மருத்துவமனைகளிலும் சென்ற ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட 388 அம்மா உணவகங்கள் தற்போது தொடர்ந்து செயல்பட்டு ஏழை எளியோருக்கு பயனளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகின்றது.

மேற்கூறிய உணவகங்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் ஒரு லட்சத்து ஐயாயிரம் பயனாளிகள் உணவு அருந்தும் நிலையில், ஒரு ஆண்டில் சுமார் நான்கு கோடி முறை உணவு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் அரிசி, கோதுமை ஆகியவை மானிய விலையில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் மூலமாகவும், மளிகை பொருட்கள், காய்கறிகள், சமையல் எரிவாயு உருளைகள் போன்றவை திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தயிர் ஆவின் நிறுவனத்திடம் பெறப்படுகிறது.

இந்த உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு 300 ரூபாய் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக கடந்த மூன்றாண்டுகளில் 148.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேற்கூறிய பல்வேறு செலவினங்களுக்கும் 2021 மே மாதம் முதல் இது வரை சென்னை மாநகராட்சியால் சுமார் 400 கோடி ரூபாயும், அரிசி மற்றும் கோதுமைக்கான தமிழ்நாடு அரசின் மானியமாக 69 கோடி ரூபாயும் என, மொத்தமாக 469 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இந்த உணவகங்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட இந்த அரசு வழிவகுத்துள்ளது.

சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அந்த உணவகம் செயல்படும் முறை, வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவற்றை சோதனை செய்ததோடு, அங்கு உணவருந்த வந்த பயனாளிகளோடும் உரையாடினார்கள். பல்வேறு அம்மா உணவகங்களில் உள்ள பாத்திரங்கள் மற்றும் சமையல் கருவிகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவற்றை மாற்றி புதிய பாத்திரங்கள் மற்றும் கருவிகளை 7 கோடி ரூபாய் செலவில் வழங்கிட ஆணையிட்டார். மேலும், 14 கோடி ரூபாய் செலவில் இந்த உணவகங்களை புனரமைத்திடவும் ஆணையிட்டுள்ளார்.

தங்கள் பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களுக்கு அவ்வப்போது நேரில் சென்று ஆய்வுசெய்து தேவையான உதவிகளை செய்து தருமாறு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ‘தமிழ்நாடு அறிவுசார் நகரம்’ அமைக்க

# நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடக்கம்!

## ஆக. 22 வரை பொதுமக்கள் கருத்து தெரிவிக்கலாம்!

*சென்னை, ஜூலை 20-*

*திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அறிவுசார் நகரம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. ஆக. 22 ஆம் தேதி வரை பொதுமக்கள் கருத்து தெரிவிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.*

*கல்வியை மையமாகக் கொண்டிருக்கும் உலகத் தரத்திலான ஓர் அறிவு சூழல் அமைப்பாக தமிழ்நாடு அறிவுசார் நகரை உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 200 கோடி ரூபாய் மதிப்பில் சிறந்த பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள், திறன்மிகு மையங்கள் மற்றும் அறிவுசார் தொழிலகங்கள் அனைத்தும் அருகருகே நவீன நகரத்தில் அமைக்கப்படுகிறது.*

*பசுமையான வாழ்விட சூழலில் அடுத்த தலைமுறைக்கான புத்தாக்கத்தை உத்வேகத்துடன் ஊக்குவிக்கும் வகையில் அனைத்து வசதிகளும் இடம்பெற உள்ளது.*

*இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அறிவுசார் நகரம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேல்மாளிகைப்பட்டு கிராமத்தில் 17 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த முதல்நிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான கருத்துக்களை மாநெல்லூர் சிப்காட் தொழிற்பூங்கா மாவட்ட வருவாய் அலுவலரிடம் வரும் ஆகஸ்ட் 22 ஆம் தேதிவரை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.*